


# தாரமங்கலம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# தாரமங்கலம்

ஆர். பூங்குன்றன், எம்.ஏ.,

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008

அட்டைப்படம் :
கட்டி முதலியார் சின்னங்கள்

முதற் பதிப்பு 1979 - 2000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை. வெளியீடு எண். 58

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

---

வரலாற்று நூல்களை வாங்கிப் படியுங்கள்

திரு. மா. சந்திரமூர்த்தி, எம். ஏ.

# தாரமங்கலம்

நாற்புறமும் மலைகள் சூழ்ந்த கொங்கு நாடு தனக்கென தனி அலாதியான பாரம்பரியத்தைக் கொண்டது. கோவை மாவட்டம், சேலம் மாவட்டத்தின் ஓமலூர், சங்ககிரி, நாமக்கல், திருச்செங்கோடு ஆகிய வட்டங்கள், மதுரை மாவட்டத்தின் பழனி வட்டம், திருச்சி மாவட்டத்தின் கரூர் வட்டம் ஆகியவை பண்டைய கொங்கு நாட்டுப் பகுதிகள். கொங்குநாடு நான்கு பெரும் பிரிவ்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை வடகொங்கு, தென்கொங்கு, மீகொங்கு, மழகொங்கு என்பன. இந்தப் பிரிவுகளைப் பண்டைய இலக்கியங்களும்; கல்வெட்டுகளும் சுட்டுகின்றன. கொங்கு மண்டல சதகம்; கொங்கு தேசம் இருபத்திநான்கு உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது என்று கூறும். ஆனால் கோவை மாவட்டத்துப் பாரியூர்க் கல்வெட்டு இருபத்திரண்டு நாடுகளைக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு எட்டுநூறு ஆண்டுகட்கு முற்பட்டது. இன்றைய பவானி ஆற்றங்கரையின் வடக்கில் அமைந்திருந்த பகுதிக்கு வடகரை நாடு என்று பெயர். வடகரை

நாட்டிற்கு அடுத்திருந்த நாடு பூவாணி நாடாகும். பவானி ஆற்றினைப் பண்டைய நாளில் பூவாணி ஆறு என்றும், அதன் அருகில் இருந்த நாட்டிற்குப் பூவாணி நாடு என்றும் சுட்டப்பட்டது என்று அறிஞர் கள் கூறுவர்.

பூவாணி நாடு.

இன்றைய சங்ககிரிவட்டம், ஓமலூர் வட் டம் ஆகிய வட்டங்களைத் தன்னுள் கொண் டிருந்தது பூவாணி நாடு. இந்நாடு வட பூவாணி நாடு என்றும், தென்பூவாணி நாடு என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. சோழர் காலத்தின் இறுதி காலக் கல்வெட்டுகளில் இப்பகுதி பூவாணி நாடு என்று அழைக்கப்படுகின் றது. வடக்கிலும், மேற்கிலும் கிழக்கு மலைத்தொடர் அமைந்துள்ளது. புலவர் நாவில் தவழ்ந்த காவிரித்தாய் இந்நாட்டின் அருகில் பாய்ந்தோடுகிறாள். காவிரி மட்டு மின்றி உப்பாறு, பாலாறு, தொப்பை யாறு போன்றவை இந்நாட்டில் பாய்ந்து வளப்படுத்திய காலம் ஒன்றிருந்தது. மலை வளமும், நீர்வளமும் பெற்றிருந்த அந்த நாளில் இங்கு வாழ்ந்த மனிதர்கள் வரலாறு படைத்தனர். இந்நாடு இரண் டாயிரம் ஆண்டு வரலாறு கொண்டது. கொங்கு நாட்டின் வடபுறத்தில் பூவாணி

நாடு அமைந்திருப்பதால் அந்நாளைய கங்கர், ஒய்சாளர், மைசூர் மன்னர் ஆகியோர் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. பூவாணி நாட்டில் அமரகுந்தி, இடைப்பாடி, தாரமங்கலம், இலவம்பட்டி, ஓமலூர், சங்ககிரி போன்ற ஊர்கள் தொன்றுதொட்டே உள்ளன. அமரகுந்தி, பூவாணி நாட்டின் தலைநகரமாகும். சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயிரத்தெழுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட கல்வெட்டும் கூட பூவாணி நாட்டில்தான் உள்ளது.

## தாரமங்கலம்

தாரமங்கலம் இரண்டாயிரம் ஆண்டு வரலாறு கொண்ட ஊர். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தாலூக்கா தலைநகராய் இருந்தது. எட்டுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட கல்வெட்டுகளில் தாரமங்கலம் பற்றி குறிப்பிடப்படுகின்றது. இன்று வரையில் அப்பெயர் நிலை பெற்றுள்ளது. தாரை என்றால் நட்சத்திரம் என்றும் மங்கலம் என்றால் பிராமணர்கள் குடியிருப்பு என்றும் பொருள் கொள்வர். இங்குள்ள இளமீசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்றில் இளையன் நல்ல உடையப்பன் என்பான் தன் தந்தையின் நினைவாக இலக்ஷ்மண சதுர்வேதிமங்கலம் என்றொரு பிராமணக் குடியிருப்பினை உரு

வாக்கிறான் என்று கூறப்பட்டுள்ளது. தாரமங்கலத்தில் பிராமணர்கள் மட்டுமின்றி வேளாளர்கள், முதலிகள் ஆகியவர்கள் இருந்தனர். எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட கல்வெட்டுகளில் இவர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. நானூறு ஆண்டுகட்கு முற்பட்ட கல்வெட்டு ஒன்றில் கட்டி முதலியார்கள் குறிப்பிடப்படுகின்றார்கள். பண்டைக் காலத்திலேயே தாரமங்கலம் கல்வி ஞானத்தில் சிறப்புற்றிருந்தது. ஸ்ரீ கண்ட தேவர் என்ற அறிஞர் அங்கு வாழ்ந்தார். அவருக்குக் கௌட சூடாமணி, வித்யா சமுத்திரம் என்ற பட்டப் பெயர்கள் உண்டு. இவருடைய தந்தைக்குக் குருதட்சிணையாக நிலம் அளிக்கப்பட்டது. குருதட்சிணை அளித்தவர்கள் தாரமங்கலத்தைச் சேர்ந்த ஆறு வெள்ளாளர்கள். இந்தச் செய்தி இளமேசுவரர் கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. காலம் எழுநூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

## கட்டி முதலிகள்

இன்றைய சேலம் மாவட்டம், கோவை மாவட்டத்தின் காவிரிக்கரை ஆகிய பகுதிகள் கட்டி முதலியார்களுடைய ஆட்சியின் கீழ் இருந்தன. இம்முடிகட்டி முதலி, வணங்காமுடிகட்டிமுதலி ஆகிய இருவர்

கள் கட்டி முதலியார் பரம்பரையில் சிறப்புற்ற அரசர்கள், கட்டிமுதலிகளின் தோற்றம் பற்றி இதுவரையில் தெளிவான சான்று எதுவும் கிடைக்கவில்லை. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் 'கட்டி' என்ற அரச மரபினர் பற்றிய செய்தி காணப்படுகிறது. அந்த அரசர்களும் இந்தப் பகுதியில் தான் ஆட்சி செய்திருக்க வேண்டும். அகநானூற்றில் 'வெல்வேற்கட்டி' என்று குறிப்பிடப்படுகின்றான் ஒரு மன்னன். சமீப ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் கட்டிணை பருமர் கல்வெட்டுகள் கண்டறியபட்டுள்ளன. மேலே கூறப்பட்ட அரசர்களுக்கும் கட்டி முதலியார்களுக்கும் பெயர் ஒற்றுமை மட்டுமே இருக்கிறது. வரலாற்று ரீதியான தொடர்பு பற்றிய ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை. கட்டிமுதலியார்களைத் தொண்டை வேளாளர் என்று திரு. ரிச்சர்ட் கூறுவார். கொங்கு வேளாளர் என்று கூறுவர் சிலர். தென்னிந்தியாவில் விஜயநகர சாம்ராச்சியம் சீர்குலையும் நேரத்தில் ஆங்காங்கு இருந்த சிற்றரசர்கள் அந்தந்தப் பகுதியில் தங்களை அரசர்களாக அறிவித்துக் கொண்டனர். அவ்வாறு கட்டி முதலிகளும் தங்களைத் தனி

அரசர்களாக பறை சாற்றிக்கொண்டது இயல்பானதே. இவர்கள் மெய்க்கீர்த்தி விஜயநகரமன்னர்களின் மெய்க்கீர்த்தியை போன்றதே. கட்டி முதலிகள் தங்களுக்கென சின்னமும் கொடியும் வைத்து இருந்தனர். வாடாத மாலை, வண்ணத் தடுக்கு, புலி, வில், கயல் முதலியன அவர்கள் கொடியும் சின்னமும் ஆகும். வண்ணத் தடுக்கினைச் சதுரங்க பலகை என்றும் கூறுவர். தாரமங்கலம் அருகில் உள்ள எலவம்பட்டி கிராமத்தில் கட்டி முதலியார் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கட்டி முதலியார்கள் சிறப்பு பேசப் படுகின்றது.

> "கொங்கான வீரசோழ மண்டலத்தில் குன்றத்தூர்ச் சாவடிக்குச் செல்லாநின்ற பூவாணிய் நாட்டுக் கெல்லூர் பிரதான ஸ்தலமான தாரமங்கலத்தில் வாழ்ந்திருக்கும் நாடு வாழி வெள்ளாழர் நிலங்கிழார் வணங்காமுடி பண்ணிக் குடுத்து, வாடாதமாலை, புலிக்கொடி, வில்க்கொடி, மகரக்கொடி, சிங்கக்கொடியும், மன்னவர் வணங்கிலும் தான் வணங்காத மத்ஸகக்குடோரி விருதும், படைதுகள் வலிமையும், பெருமை உடைதா வாழ்கின்ற வணங்காமுடி முதலியார்களில் ஸ்ரீமந் முதலியார் நல்லுடையப்பர் இம்முடி கட்டி முதலியார்"

மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள கல்

வெட்டு வாசகம் கட்டி முதலிகள் அனைவர்க்கும் பொதுவான வாசகம். இவர்கள் வடகொங்குநாடு, கீழ்க்கொங்குநாடு ஆகிய பகுதிகளில் கோயில்களையும் கோட்டைகளையும் கட்டியெழுப்பியுள்ளனர். ஆத்தூர் பவானி, ஈரோடு, திருச்செங்கோடு, மோகனூர் சேந்தமங்கலம் அமரகுந்தி ஆகிய ஊர்களில் அவர்கள் கட்டிய கோட்டைகள் இருந்தன. பவானி சங்கமேசுவரர் கோயில் திருப்பணி, கட்டி முதலிகளுடையது. அங்குள்ள பெருந்தூண்களில் கட்டி முதலியார் துணைவியாருடன் வணங்கி நிற்கும் காட்சி வடிக்கப்பட்டுள்ளது. இவர்தம் சிற்பத்தின் கீழ் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. பவானி கோயில் அருகில் கேட்பாரற்று கிடக்கும் தூண்களில் இத்தகைய உருவங்களைக் காணலாம். திருச்செங்கோடு, சங்ககிரி, ஓமலூர் ஆகிய ஊர்க்கோயில்களும் கட்டி முதலிகளின் திருப்பணியே.

## முதலிகளுக்கு முன் ஆண்டோர்

தாரமங்கலம் எளமேசுவரர் கோயிலில் பத்துக்குமேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. ஒய்சாள மன்னன் வீரராமநாதன் கல்வெட்டுக்கள் காலத்தால் முற்பட்டன. ஒய்சாளர்கள் வடகொங்குநாட்டைத் தங்கள் ஆட்சிக்கீழ் கொண்டு வந்தபின் கோவை மாவட்டத்துச் சேவூரைத்

துணைத்தலைநகராக்கினர். பாண்டியர்கள் கை ஓங்கவும் கொங்கு நாட்டில் ஒய்சாளர்கள் செல்வாக்குக் குறைந்தது. சடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பானின் கல்வெட்டு இக்கோயிலில் ஐந்து உள்ளன. விஜயநகர அரசர்கள் சதாசிவராயர், அச்சுதராயர் ஆகியோர் கல்வெட்டுகள் இரண்டு உண்டு. கட்டி முதலி கால இறுதியில் மைசூர் அரசன் தொட்டதேவராயன் இந்த பகுதியைப்பிடித்தான். இவன் உறவினனை சிக்கதேவராயனின் கல்வெட்டு கைலாசநாதர் கோயிலில் உள்ளது.

கோயில்கள்

தாரமங்கலத்தில் பல கோயில்கள் இருப்பினும் அவற்றில் குறிப்பிடத்தக்கவை கைலாசநாதர் கோயில், இளமேசுவரர் கோயில், பத்திரகாளியம்மன் கோயில், பெருமாள் கோயில் ஆகியவை. இவற்றிலும் கைலாசநாதர் கோயில் கலை, வரலாறு, பண்பாடு, பக்தி போன்றவற்றில் முன்னோர்கள் சாதித்த சாதனையை இன்று வரை அறிவித்து நிற்கும் கோயிலாகும். கைலாசநாதர் கோயிலை, கட்டி முதலிகள் கட்டியதுபற்றி ஒருகதை வழங்குகிறது. "இப்பொழுது கோயில் அமைந்துள்ள இடத்தில் கட்டி முதலியாருடைய ஆடுகள் மேய்வதற்குச் செல்லும். அப்

பொழுது பசுமாடுகள் பால் கொடுப் பதில்லை. முதலியார் ஆட்டு இடையர்களை அடித்தார். அதன் பிறகு ஒரு கனவில் இறைவன் தோன்றி அந்த இடத்தில் பூமி யில் ஒரு லிங்கம் இருப்பதாகவும், அதற்கு வடக்கே ஒரு புதையல் இருப்பதாகவும் தெரிவித்தார். அந்தப் புதையலைக்கொண்டு கோயில் கட்டினார் முதலியார். உண்மை கலக்காத கதை. ஆனால் கதையில் மாட்டு மந்தை சம்பந்தப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. கொங்குநாடு முழுவதும் உள்ள கோயில்களில் இதுபோன்ற கதை வழங் கப்படுகிறது. பண்டைய நாட்களில் மாடு வளர்ப்பு இப்பகுதியில் சிறப்புற்று இருந்த மையே இதற்குக்காரணம். கோயில், கட்டி முதலியார் காலத்திற்கு முன்பே கட்டப் பட்டிருக்கவேண்டும். அர்த்த மண்டபத் தில் உள்ள கல்வெட்டு ஒன்று 'பழைய மண்டபத்திலிருந்த கல்வெட்டு' என்று தொடங்குகிறது. இக்கல்வெட்டு ஒய்சாள மன்னன் வீரராமனாதன் என்பவனுடை யது. ஆனால் கோயில் கட்டிமுதலியார் காலத்தியது. திருச்சுற்று மாளிகை, வெளித்திருச் சுற்றுமதில், உயர்ந்த கோபுரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கைலாசநாதர் கோயிலுக்குள் அம்மன் கோயில், முருகன் கோயில், பிள்ளையார்

கோயில் போன்ற கோயில்களும் கட்டி முதலியார் காலத்துக் கோயில்கள். கைலாசநாதர் கோயில் கட்டிமுதலிகளின் குலதெய்வக் கோயிலாகும். எலவம் பட்டி கல்வெட்டில் "இம்முடி கட்டிமுதலியாரேரோம் தேவஸ்தான தர்மம் சிலாசாசனம் பண்ணிக்குடுத்தோம். நம்முடைய குலஸ்வாமியாரான தாரமங்கையில் சிவன் க்ஷேத்திரத்தில் வாழும் கைலாசநாத சுவாமியாருக்கும்" என்று கூறப்படுவதை எடுத்துக் காட்டலாம். இளமேசுவரர் கோயில் எட்டு நூறு ஆண்டுகட்கு முன் கட்டபட்டது. அர்த்த மண்டபம் கருவறை ஆகியவை கட்டிமுதலிகளுக்கு முன் கட்டப்பட்டவை. முகமண்டபம் கட்டிமுதலிகளால் கட்டப்பட்டது. ஆனால் கட்டிமுதலிகள் தங்கள் கோயில்களைக்கட்ட பயன்படுத்திய இளஞ்சிவப்பு நிறக்கல்லை இம்முக மண்டபத்தைக் கட்டும்போது பயன்படுத்தவில்லை. கருங்கல்லையே பயன்படுத்தியுள்ளனர். காரணம் பழைய கோயிலும் கருங்கல்லில் கட்டப்பட்டுள்ளது. ஊருக்கு வட்மேற்கில் உள்ள பத்திரகாளி அம்மன் கோயில் கட்டிமுதலியார்கள் காலத்தைச் சேர்ந்தது.

## கலைச்செல்வங்கள்

கட்டிமுதலிகள் தங்களுக்கென ஒரு தனிக்கலைப்பாணியினை வளர்த்தனர். அவர்

கள் தங்களுக்கென தனிவகையான கல்லினைப்பயன்படுத்தினர். அக்கல் இளஞ்சிவப்பு' நிறங்கொண்டது. பம்பாரபட்டி என்ற ஊரிலிருந்து கொண்டுவரப்பட்ட கல். கட்டிமுதலிகளின் கலைக்கோயில்கள் நாயக்கர் காலத்தைச் சேர்ந்திருப்பதால் அக்காலத்தில் நிலைபெற்ற கலை, மரபுகள் கலந்து நிற்பதைக்காண முடியும்.

தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் முன் மண்டபத்தில் உள்ள குதிரைத்தூண்கள் விஜயநகரர்கள் தோற்றுவித்த கலைப் படைப்பினைப் பின்பற்றி எழுந்ததாகும். திருச்சுற்று மாளிகையில் வடமேற்கு மூலையில் சுரங்க அறை ஒன்று உண்டு. இது பண்டைக் காலத்தில் விலையுயர்ந்த பொருட்களையும், பஞ்சலோகச் சிலைகளையும் பத்திரமாக வைக்கப் பயன்பட்டது. இம்மாளிகையில் ஒவ்வொரு தூணிலுல் ஒரு சிற்பம் உண்டு. பார்வதி, பிச்சாண்டார், மகாவிஷ்ணு (மோகினி), பதஞ்சலி, நந்திகேசுவரர், அகோரவீரபத்திரர், ஊடல்தீர்த்த நாயகர், அருணசலேஸ்வரர், கணபதி, எருதுடன் நிற்கும் சிவன், தட்சிணாமூர்த்தி, காளி, நால்வர், ரிஷிபத்தினி, காமாட்சி, ஊர்த்துவதாண்டவம் செய்யும் இறைவன், அய்யனர் ஆகிய சிற்பங்கள் அங்குள்ளன. மைசூர் அரசன் சிக்கதேவராயனின் அதி

காரி ஒருவன் சுப்பரமண்ணியர், வள்ளி, தெய் வானை, அறுபத்து மூவர் ஆகியவர்கள் திரு மேனிகளைக் கல்லில்வடித்து வைத்தான். கட்டி முதலிகளின் கலைப்பணியைப் புகழும் வகையிலமைந்த மரபு வழக்கு ஒன்று உண்டு. அந்நாளைய சிற்பிகளைச் சிற்பம் வடித்துத்தருமாறு கேட்டால், தாரமங் கலத்தில் உள்ளது போன்றோ அல்லது தாடிக் கொம்பில் உள்ளது போன்றோ எங்களால் செய்யமுடியாது. அதற்குச் சம்மதமானால் செய்கிறோம்.' என்று கூறு வார்களாம்.

கோயில் மண்டபங்களில் உள்ள கொடுங் கையில் பல்லி, குரங்கு, கிளி, மீன் மற்றும் பல விலங்குகளின் உருவங்கள் வடிக்கப்பட் டிருக்கின்றன. தூண்களில் வடிக்கப்பட் டுள்ள புடைப்புச்சிற்பங்கள் அழகமிக் கவை. வாலியும் சுக்ரிபனும் சண்டையி டும் காட்சி ஒரு தூணில் சித்தரிக்கப்பட் டுள்ளது. எதிரில் உள்ள தூணில் ராமன் வில்லை நானேற்றி நிற்கும் காட்சி வடித் திருக்கிறார்கள். ராமன் உருவம் நிற்கும் தூண் அருகில் நின்றால் வாலி சுக்ரீபன் சண்டைக் காட்சி தெரியும். ஆனால் வாலி சிற்பத்தூண் அருகில் நின்றால் ராமன் உரு வம் தெரிவதில்லை. இந்தச் சிறப்பு குறிப்

பிடத்தக்கது. இரண்டு தூண்களுக்கும் இடைப்பட்ட தூரம் பத்தடி இருக்கும்.

முன்மண்டபத்தின் விதானத்தில் அழகு வாய்ந்த தாமரை வடிக்கப்பட்டுள்ளது: மலர்ந்து நிற்கும் தாமரையில் கிளிகள் கொத்தி நிற்கும் காட்சி யாரையும் கவரும். கிளிகளும் தாமரை இதழ்போல் காட்சி அளிக்கின்றன. தாமரை மலர்ந்துள்ள சதுரத்தின் ஓரத்தில் தொங்கும் கல்சங்கிலிகள் வேலைப்பாடு கொண்டவை. கைலாசநாதர் கோயில் சிற்பங்களைப்பற்றி தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் குறிப்பிடுவது எடுத்துக் காட்டத்தக்கது.

"ஆலயத்திற்குச் சென்றேன் நான் கண்ட சிற்பக்காட்சியை எழுதித் தெரிவிப்பதென்பது இயலாத காரியம் ஒவ்வொரு தூணிலும் மிகப்பெரிய சிற்ப உருவங்களைக் கண்டேன். ஒன்றைப் பார்த்தனுபவிக்க ஒரு நாள் வேண்டும்...... சிவாலயத்தின் உள்ளே பல லட்சம் பொருட் செலவு செய்தாலும் அமைப்பதற்கரிய சிற்ப உருவங்கள் பல இருந்தன. எல்லாம் சிறிய அளவில் சிற்பியின் வித்தகத்திறனை நன்குக விளக்கும் அற்புத வடிவங்களாக உள்ளன. மூங்கிற்பிளாச்சுக் கதவைத்.. திறந்த போது என் கையை அது குத்தியது; உள்ளே போய்ப் பார்த்து

விட்டு வந்த போது அது கண்ணையும் கருத்தையும் குத்தியது. இந்த நாட்டின் நிலைக்கு நான் இரங்கி வருந்தினேன்... தாரமங்கலம் சென்றதில் சிலப்பதிகாரம் கிடைக்கா விட்டாலும் சிற்பச் செல்வத்தைக் கண்டு களித்த திருப்தி உண்டாயிற்று."

ஐயர் அவர்களின் கூற்றே தாரமங்கலச் சிற்ப நுட்பத்திற்குப் போதுமான சான்று.

## தெப்பக் குளம்

நூறு அடி சதுரம் உள்ள தெப்பக்குளம் ஒன்று கோயிலுக்குக் கிழக்கில் உள்ளது. கட்டிமுதலிகள் உருவாக்கிய குளம். இந்தக்குளத்தைப் பற்றி திரு ரிச்சர்ட் அவர்கள் குறிப்பிடும் போது தென்னிந்தியாவிலேயே சிறந்த குளம் என்பார். கைப்பிடி சுவரின் மீது முப்பத்தாறு நந்திகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். விளக்கு மாடங்கள் பல. இக்குளம் புனித நீராடுவதற்கு வெட்டப்பட்டது. ஊருக்கு வடமேற்கில் உளள எண் கோண வடிவ குளம் கட்டி முதலியார் காலத்தில் உருவாக்கப்பட்டது. திருவெள்ளறை என்ற ஊரில் உள்ள ஸ்வஸ்திக குளத்தைப் போன்று இக்குளம் சமயக் கருத்தினைப் பிரதிபலிப்பதாய் இருக்க வேண்டும்.

## இளமேசுவரர் கோயில்

இக்கோயில் எழுநூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்ட கோயில். கோயிலில் பதினொரு கல்வெட்டுகள் உள்ளன. சடாவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஐந்து. ஒய்சாள வீரராமனாதன் கல்வெட்டு ஒன்று. விஜயநகர் கல்வெட்டு இரண்டு. பெயர் தெரியாத கல்வெட்டு ஒன்று. இக்கோயிலுக்குத் தானமளித்தது பற்றி எந்தக் கல்வெட்டும் கூறவில்லை. பிராமணர்களுக்கு நிலமும், கிராமமும் அளித்தது பற்றியே கூறுகிறது. கோயில் பெயர் கூட எந்தக் கல்வெட்டிலும் கூறப் படவில்லை. கைலாசநாதர் கோயில் கல்வெட்டு ஒன்றில் இக்கோயிலுக்கு இளம சமுத்திரம் என்ற ஊரைத் தானமளித்த செய்தி கூறப்படுகிறது. இக்கோயில் கல்வெட்டு ஒன்றில் இளமன் என்பவன் பற்றி பேசப்படுகின்றது. சுந்தர பாண்டியன் காலத்தில் வாழ்ந்த இவன் பெயராலேயே இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம்.

## சாசனங்கள் சொல்லும் செய்தி

தாரமங்கலம் கோயில்களில் பதின் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இளமேசுவரர் கோயில் கல்வெட்டுகள் அனைத்தும் பிராமணர்களுக்கும், கல்வி கேள்வியிற் சிறந்த அறிஞர்களுக்கும்

தானம் வழங்கியது பற்றியே பேசுகின்றன. கைலாசநாதர் கோயில் கல்வெட்டுகளில் ஒன்று திருப்பணி பற்றி கூறுகின்றது. மற்றொன்று தேவதானம் அளித்த செய்தியைக் கூறுகின்றது. விஜயநகர மன்னன் அச்சுதராயன் காலத்துக் கல்வெட்டு ஒன்று சிதம்பரத்தில் ஒரு மடம் கட்டியது பற்றிக் கூறக் காணலாம். கட்டியவன் தாரமங்கலத்தைச் சேர்ந்தவன். அந்த மடத்திற்கு வரிகளை மானியமாக அளித்துள்ளான். சில கல்வெட்டுகள் ஏரி வெட்டிக் கொடுத்தது பற்றி குறிப்பிடுகின்றன. சுந்தரபாண்டியன் காலத்தில் வடபூவாணி நாட்டுத் தலைவன் கண்டிய தேவன் என்பான் ஓர் ஊரையே தானம் அளித்துள்ளான். வேளாளர்கள், முதலிகள் பற்றிய குறிப்பு சில கல்வெட்டுகளில் வரக்காணலாம். நல்ல உடையப்பன் என்பான் அளித்ததானம் சுட்டப்படுகின்றது.

சாசனச் செய்யுள்

சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு, உத்தமசோழபுரம் போன்ற ஊர்க்கல்வெட்டுகளில் பாடல்களும் காணப்படுகின்றன. தாரமங்கலம் இளமேசுவரர் கோயிலில் உள்ள பாடல் சாசனம் கட்டி முதலியாரின் சிறப்பினைப் பேசுகிறது.

தன்னிலை குன்றினாலும் கூறிய வார்த்தை தவறாத பண்பு உள்ளவன் கட்டி முதலி என்பது பாடலின் முடிந்த கருத்து. இந்தச் சிறப்பினைச் சொல்லுகின்ற முறை மிகவும் நயமானது. இலக்கியச்சுவை மிக்கது.

செங்கதிர் பன்னிரண்டீசர்
பதினொன்று திக்குப் பத்து
கங்கையு மொன்பது வெற்பெட்
டெழு கடல் கார்த்திகை ஆறு
ஐங்கணை நான்மறை முச்சுடர்
சாதி இவை இரண்டு
மங்கை வரோதையன் கட்டி
முதலிதன் வார்த்தை ஒன்றே.

பாடிய புலவன் கட்டி முதலியின் அவையில் இருந்திருக்கவேண்டும். மிக எளிமையான நடையில் அமைந்திருக்கும் இப்பாடலுக்கு விளக்கம் தேவை இல்லை.

தேவதான ஊர்கள்

பண்டைக்கால மன்னர்கள் தம்நலம் கருதியும், நாட்டு மக்கள் நலம் கருதியும் கோயிலுக்கு நிறைய தானங்களை வழங்கினர். சோழர் காலத் தொடக்கத்தில் நிலத்தானம் குறைவாகக் காணப்பட்டாலும் பின்னால் வந்த சோழர்கள் நிலத்தானத்தையே மிகுதியும் அளித்தனர். ஊர் முழுவதையும் கோயில்களுக்கு அளித்த செய்தியும் உண்டு. பண்டைய

மரபினைப் போற்றிய கட்டி முதலிகளும் பல ஊர்களைக் கைலாசநாதர் கோயிலுக்கு மான்யமாக விட்டிருந்தார்கள். அந்த ஊர்கள்: 1. தசவிளக்கு (தினசரிபூசைக்காக), 2. பாப்பாம்பாடி, 3. சின்னகுருக்கள்பட்டி (குருக்கள் கிராமம்), 4. காதம்பட்டி (பிராமணார்களுக்கு), 5. எலவம்பட்டி (திருவாதிரை விழாவிற்கு), 6. கோனகப்பாடி (தெப்ப உற்சவத்துக்காக), 7. சின்ன சோரகை 8. பெரிய சோரகை (ஆலய சிப்பந்திகளுக்கு)

நவகண்டச் சிற்பம்

கொங்கு நாடு முழுமையும் பரவலாகக் காணப்படும் நவகண்டச்சிற்பம், தாரமங்கலம் கைலாசநாதர் கோயிலிலும் உள்ளது. இதனைச் சாவான் கல்லு என்று அழைப்பர். ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட மணிமேகலை, சோழர் காலத்துக் கலிங்கத்துப் பரணி போன்ற இலக்கியங்களில் தன் தலை அரிந்து கொற்றவைக்குக் கொடுக்கும் நவகண்டம் பற்றி கூறப்படுகிறது. ஊர் நன்மைக்காகவும், அரசர் வெற்றிக்காகவும் தன்னைப் பலியிட்டுக் கொள்வர் பண்டை நாளைய வீரர்கள். தர்மபுரி மாவட்டத்தில் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட வீரக்கற்களில், தன்னைப் பலியிட்டுக் கொண்ட வீரர்களின்

பீடும் பெயரும் பொறித்த கற்கள் சில உள்ளன. மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயில்களில் தன் தலையை அரிந்து கொற்றவைக்குக் கொடுக்கும் வீரர்களின் உருவம் வடிக்கப்பட்டுள்ளன. கொல்லிமலை அறப்பள்ளி ஈசுவரர் கோயிலில் இத்தகைய சிற்பங்கள் நிறைய உள்ளன. அவை ஆயிரம் ஆண்டுகட்கு முன் செய்யப் பட்டவை. கொங்கு நாட்டில் நவகண்டம் கொடுக்கும் வழக்கம் இந்த நூற்றாண்டின் தொடக்ககாலம் வரை இருந்தது. தார மங்கலத்தில் உள்ள நவகண்ட சிற்பம் இருநூறு ஆண்டுகட்கு முற்பட்டது. கோபுரத்தைக் கடந்து செல்லும் போது வலப்புறத்தில் நவகண்டச்சிற்பம் நிற்பதைக் காணலாம்.

## பாண்டியர் குழி

சேலம் மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் பாண்டியர் குழி, தாரமங் கலம் அருகிலும் உண்டு. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களைப் பெரிய பானை போன்ற தாழியில் இட்டுப் புதைப்பர். தாழியைச் சுற்றி நான்கு பலகைக்கற்களை நட்டுவைப் பர். அதற்குமேல் ஒரு பலகைக் கல்லை மூடியிருப்பர். இந்தக்கல் வீட்டினைச் சுற்றி லும் சிறிதும் பெரிதுமான கற்களைப்

பரப்பி மண்ணைப்போட்டு மறைப்பர். இதனைச் சுற்றி வட்டவடிவில் பெரிய கற்களைப் புதைப்பர். அதனைப் பெருங்கற் சின்னம் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். தாழியில் மனித எலும்புகள், இறந்தவன் பயன்படுத்திய பொருட்கள் ஆகியவை இருக்கும்.

## தாரமங்கலத்தைச் சுற்றியுள்ள பண்டைய ஊர்கள்

அம்மன் கோயில்பட்டி : தாரமங்கலம்-ஓமலூர்ப் பாதையில் ஓமலூரிலிருந்து மூன்றுகல் தொலைவில் உள்ளது. இவ்வூருக்குவடக்கில் சுப்பாறு என்ற ஓர் ஆறு ஓடுகிறது. அதன் வடகரையில் இயற்கையாய் அமைந்த பாறை ஒன்று உள்ளது. பாறையின் தென்கிழக்கு மூலையில் ஒரு சுனை உள்ளது. அந்தச் சுனையைத் தோண்டியவன் பெயரும் ஊரும் கூறும் கல்வெட்டு ஒன்று சுனையின் அருகில் உள்ளது. இக்கல்வெட்டு ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முற்பட்டது.

கல்வெட்டு

வரம்பன் கோசூர் கிழார் மகன் வியக்கன்
கோபன் கணதேவன் தொட சுனை

கோசூர்த்தலைவன் வரம்பன் என்பானின் மகன் இயக்கன் கோபன் கணதேவன் என்

பவன் இச்சுனையை வெட்டிஞன். இது தான் கல்வெட்டு கூறும் செய்தி. வரம்பன் என்ற பெயர் சங்ககாலச் சேரர்குலத்தோடு தொடர்புடையதாகத் தெரிகிறது. இயக்கன் என்பது சமண சமயத்தோடு தொடர்புடைய பெயர். கோபன் என்பது அரசன் பெயராக இருக்கலாம். கங்கர்களில் விஷ்ணுகோபன் என்ற மன்னன் ஆட்சி செய்துள்ளான். பல்லவ மன்னன் ஒருவனும் விஷ்ணுகோபன் என்ற பெயரைத்தாங்கி இருந்தான். கணதேவன் என்பவன் மேலே கூறப்பட்ட அரசர்களில் ஒரு அரசன் கீழ் குறுநில மன்னனுய் இருந்திருக்கவேண்டும். உப்பாற்றின் தென்கரையில் நத்தமேடு ஒன்று உள்ளது. அங்கு பண்டையக் காசுகளும், தாழிகளும், பானைகளும், செங்கற்களும் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. அம்மன் கோயில்பட்டி கல்வெட்டு சேலம் மாவட்டத்திலேயே பழமை வாய்ந்த கல்வெட்டு. இந்தக் கல்வெட்டைக் கண்டுபிடித்தவர் புது. போ. வெங்கடராமன்.

எலவம்பட்டி

தாரமங்கலம் ஜலகண்டாபுரம் நெடுஞ்சாலையில் மூன்று கல் தொலைவில் எலவம்பட்டி உள்ளது. இவ்வூரில் கொல்லை மேட்டில் பாறை உள்ளது. பாறையில்

சிறு சுனையும் உண்டு. இதனை ஊரார் பாழி என்று கூறுவர். சுனை அருகில் முப்பதடி நீளமும்; இருபதடி அகலமும் கொண்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு கட்டி முதலியார்களில் இம்முடி கட்டி முதலியார் காலத்தைச் சேர்ந்தது. கைலாசநாதர் கோயிலுக்கு இவ்வூரைத் தானமாக வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. ஊரைத் தானமாக வழங்கிய கட்டி முதலியார் இவ்வூருக்குக் கைலாசநாதபுரமென்று பெயரிட்டு வழங்கினார். இக்கல்வெட்டில் ஆறியூர், செட்டிமாங்குறிச்சி, இருப்பாளி, தோரமங்கலம், வெள்ளப்பாறை, நாச்சன்பட்டி போன்ற ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன. நல்லான் கவுண்டன், வள்ளியாக்கவுண்டன் தேகாவிண்டை கவுண்டன், அக்கப்பன் போன்றவர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். இக்கல்வெட்டு முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டது. மேற்கண்ட ஊர்களைத் தவிர ஓமலூர், அமரகுந்தி போன்ற ஊர்களும் பெரும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்தவை ஆகும்.

25 காசு